பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி சென்னை – 4

23 07 2025  WEDNESDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா மற்றும் மாலத்தீவு இடையேயான நல்லுறவு 60 ஆண்டுகளை எட்டியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- வலுவான தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பை நாடு பெற்றிருப்பதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- மருத்துவ அவசர நிலையை கையாளும் வகையில் 16 லட்சம் ரயில்வே பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- இந்தியா – நேபாளம் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான உள்துறை செயலர்கள் நிலையிலான பேச்சுவார்த்தை புதுதில்லியில் நடைபெற்றது.

- பல்கலைக்கழங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டியின் வில்வித்தை பிரிவில் இந்தியாவின் Parneet Kaur அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்

இனி விரிவான செய்திகள் –

<<<<<<<>>>>>>

இந்தியா மற்றும் மாலத்தீவு இடையேயான நல்லுறவு 60 ஆண்டுகளை எட்டியிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நான்கு நாட்கள் அரசுமுறைப்பயணமாக பிரிட்டன் மற்றும் மாலத்தீவுக்கு புறப்பட்ட அவர், தமது சமூக வலைதள பதிவில், இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

மாலத்தீவின் 60-ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் பங்கேற்பது தமக்கு பெருமையளிப்பதாகவும் அந்நாட்டு அதிபர் டாக்டர் முகமது மொய்சுவுடன் தாம் மேற்கொள்ளவிருக்கும் பேச்சுக்கள் பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அதையடுத்து கேள்விநேரம் நடத்த ஒத்துழைக்குமாறு அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்

எதிர்க்கட்சியினர் அமளிக்கு இடையே பீகாரில் மேற்கொள்ளப்பட்டுவரும் ரயில்வே பணிகள் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் பதிலளித்தார்.

அதன்பிறகும் அமளி தொடர்ந்ததால் நண்பகல் 12 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை திரும்பப்பெறக்கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அமளிக்கு இடையே தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா மற்றும் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு திருத்த மசோதாக்களை அத்துறைக்கான அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா அறிமுகம் செய்து வைத்தார்.

அதன்பின்னர் கேள்விநேரத்திற்கு பிறகான விவாதத்தை நடத்த அவை அலுவலர் முயன்றபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்துஅமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து கோவா சட்டப்பேரவையில் பழங்குடியினர் பிரதிநிதித்துவ சீர்திருத்த மசோதா குறித்து

விவாதிக்க ஒத்துழைப்புத் தருமாறு அவை அலுவலர் கேட்டுக்கொண்டார்.

அதன்பிறகும் அமளி தொடர்ந்ததால் இன்று நாள் முழுமைக்கும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானங்களை அனுமதிக்க அவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் மறுப்பு தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் தொடர்ந்துஅமளியில் ஈடுபட்டதால் நண்பகல் 12 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது கேள்விநேரத்தை நடத்த அவை அலுவலர் முயற்சி மேற்கொண்டார்.

எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோஷமிட்டதால் அவை இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது,

பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் அவை கூடியபோது எதிர்க்கட்சியினரின் அமளிக்கு இடையே கடல்வழி சரக்கு பரிமாற்ற மசோதாவை மத்திய நீர்வழி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் அறிமுகப்படுத்தினார்.

இந்திய கடல்வழி சரக்கு பரிமாற்ற சட்டத்திற்கு மாற்றாக கொண்டுவரப்படும் இந்த மசோதா துறைமுகங்களிலிருந்து எடுத்துச் செல்லப்படும் சரக்குகளுக்கான பொறுப்புகள் உரிமைகளை மறுவரையறை செய்ய உதவும்.

இந்த மசோதா தொடர்பான விவாதம் நடைபெறுவதற்கு முன்னதாகவே காங்கிரஸ் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோஷம் எழுப்பி அமளியில் ஈடுபட்டன.

<<<<<<<>>>>>>

கடந்த மூன்றாண்டுகளில் மருத்துவ அவசர நிலையை கையாளும் வகையில் 16 லட்சம் ரயில்வே பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இன்று எழுத்துப்பபூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் பயணிகள் ரயிலில் உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய மருத்துவ சாதனங்கள் அடங்கிய மருத்துவ பெட்டியை வழங்க வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

ரயில் நிலையங்களில் அருகில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்களின் தொடர்பு எண்கள் பட்டியல் வைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

வலுவான தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பை நாடு பெற்றிருப்பதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இத்துறையின்மூலம் ஆண்டுக்கு 250 பில்லியன் டாலருக்கும் அதிகமான வருவாய் கிடைத்துவருவதாகவும் ஆறு மில்லியனுக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பை பெற்றிருப்பதாகவும் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவில் உலக அளவில் நாடு முன்னிலை வகிப்பதையும் இத்தொழில் நுட்பத்தின் பயன்கள் அனைத்து மக்களுக்கும் சென்று சேருவதையும் நோக்கமாக கொண்டு பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு திறன் தொடர்பான Stanford தரவரிசையில் இந்தியா முன்னணி நாடாக விளங்குவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

ஓய்வூதியம் தொடர்பான 55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகார்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், ஓய்வூதியம் தொடர்பான புகார்களை களைவதில் பாதுகாப்பு மற்றும் ரயில்வே துறைகள் முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் உள்ளதாக கூறினார்.

<<<<<<<>>>>>>

இந்தியா – நேபாளம் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான உள்துறை செயலர்கள் நிலையிலான பேச்சுவார்த்தை புதுதில்லியில் நடைபெற்றது.

இதில், உள்துறை செயலர் திரு கோவிந்த் மோகன் மற்றும் நேபாள நாட்டு உள்துறை செயலர் திரு கோகர்ணா மணி, தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

எல்லைதாண்டிய குற்றச்செயல்களை தடுத்தல், எல்லைப்புற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்களின் செயல்பாடுகளை வடிவமைத்தல், சாலை மற்றும் ரயில் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பேரிடர் மேலாண்மையில் ஒத்துழைப்பை அதிகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இப்பேச்சு வார்த்தையில் விவாதிக்கப்பட்டது.

குற்ற விவகாரங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான ஒப்பந்தம் இறுதிக்கட்டதை அடைந்திருப்பதை இரு நாடுகளும் வரவேற்றுள்ளன.

<<<<<<<>>>>>>

ரஷ்யா – உக்ரைன் இடையேயான மூன்றாவது சுற்று பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் இன்று நடைபெறுகிறது.

ரஷ்யாவின் விளாடிமிர் மெடின்ஸ்கி மற்றும் உக்ரைனின் ரஸ்டம் உமரோவ் தலைமையிலான பிரதிநிதிகள் குழு இதில் பங்கேற்கிறது.

போர் நிறுத்தத்தை எட்டும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக இப்பேச்சுவார்த்தை குறித்து உக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி கருத்து தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் ஏற்கனவே தெரிவித்த கருத்துக்கள் மீண்டும் இப்பேச்சுவார்த்தையில் வலியுறுத்தப்படும் என்று ரஷ்ய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டில் உள்ள கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நலனை காக்கும் வகையில், பிரதமரின் மகப்பேறு நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் பெரம்பலூரில் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தின் மூலமாக தாங்கள் பயனடைந்து வருவதாக பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(Sound Byte - செல்வராஜ் - 25 Sec. )*

<<<<<<<>>>>>>

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டியின் வில்வித்தை பிரிவில் இந்தியாவின் Parneet Kaur அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், பிரான்சின் Alyssia Chambraud -ஐ வென்றார்.

ஆடவர் 200 மீட்டர் ஓட்டப்பிரிவில் Animesh Kujur -ம் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

--------------

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-16 என்ற செட் கணக்கில் ஸ்காட்லாந்தின் Kirsty Gilmour -ஐ வென்றார்.

------------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-5, 11-2, 11-6 என்ற செட் கணக்கில் பிரேசிலின் Laura Souza Bazerra Da Silva -ஐ வென்றார்.

ஹூன்னத்தி திரிபாதி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

---------------

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் தனுஷ் பாபு வெள்ளிப்பதக்கம் வென்றார்.

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 200 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, இன்று மான்செஸ்டரில் தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்துவரும் இந்தியா முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை ----விக்கெட் இழப்பிற்கு ---ரன் எடுத்துள்ளது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<<END>>>>>>